# கடும் ஷெல் தாக்குதலில் வல்லைப் பாலம் சேதம்

[யாழ்ப்பாணம்]

வளலாயில் நிலைகொண்டுள்ள இராணுவம் நேற்று மாலை 5-45 மணிக்கு வல்லைப் பகுதியை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதலை மேற்கொண்டது.

வல்லைப் பாலத்தின் மீது விழுந்த ஷெல்லினால் பாலத்தின் ஒருபக்கச்சுவர் சுமார் 10 அடிநீளம் உடைந்துசிதறியது. தெய்வாதீனமாக அவ்விடத்திற்கு அண்மையில் வந்த சில சைக்கிள் பிரயாணிகள் உயிர்ச் சேதமோ காயமோ இன்றித் தப்பித்துக் கொண்டனர்.

இச்சம்பவத்தை அடுத்து அல்வீதியால் பிரயாணத்தை மேற்கொண்டிருந்த பலர் பிரயாணத்தை மேலும் தொடராது வந்தவழியே திரும்பிச் சென்றனர்.

(5ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 19 இதழ் 118

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 02 – 6 – 1995

## மன்னாரில் புக்காரா குண்டுத் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் நேற்றுக்காலை புக்காரா விமானங்கள் தாக்குதல் நடாத்தியுள்ளன.

இத்தாக்குதலின்போது ஒரே தடவையில் ஒன்பது குண்டுகள் வீசப்பட்டதாகவும் அண்மைச் சத்தத்தினால் மக்கள் மிக பவும்தற்றமடைந்து பாதுகாப்பு தேடிக் கொண்டதாகவும் அறியப்படுகிறது. க-இ

### திருமலை-மட்டு-மன்னார்-பூநகரியில்

# புலிகள் அதிரடித் தாக்குதல்; 21 படையினர் உயிரிழப்பு!

## 39 இராணுவம் படுகாயம்!

[யாழ்ப்பாணம்]

திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், பூநகரி ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகள் நேற்று மேற்கொண்ட அதிரடித் தாக்குதல்களில் இராணுவ லெப்டினன் கேணல் ஒருவர் உட்பட இருபத்தொரு இராணுவத்தினர் பலியானார்கள். முப்பத்தொன்பது இராணுவத்தினர் படுகாயமடைந்ததுடன் பத்துப்பேரை காணவில்லையெனவும் அறிவிக்கப்பட்டது. இத்தாக்குதல்களில் பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

திருகோணமலை திரியாய் காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளை தேடி அழிக்கும் நடவடிக்கையில் லெப்டினன் கேர்ணல் காமினி பெர்ணண்டோ தலைமையில் பெரிய இராணுவஅணி ஒன்று நேற்று முன்தினம் இரவு ஈடுபட்டது.

இந்த இராணுவ அணி மீது விடுதலைப்புலிகள் அதிவேக அதிரடித் தாக்குதலை மேற்கொண்டதில் இராணுவ அணிக்குத் தலைமை தாங்கிச்சென்ற லெப். கேர்ணல் காமினி பெர்

[6ம் பக்கம் பார்க்க]

## இலங்கை நிலைமை குறித்து பரிசுத்த பாப்பரசர் கவலை

[வத்திக்கான்]

இலங்கையின் வடபகுதியில் மீண்டும் மோதல்கள் ஆரம்பித்துள்ளமை குறித்தும் வன்செயல் தொடர்வது குறித்தும் தான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கததோலிக்க பேராயர் நிராணியார் சங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்: இனவாதம்,

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

## படையினரை திருப்திப்படுத்த விசேட 'காப்புறுதித் திட்டம்

[கொழும்பு]

ஸ்ரீலங்கா இராணுவத்தில் ஏற்கனவே உள்ளோரை திருப்திப்படுத்தவும் புதிதாக சேர்வோரை ஊக்கப்படுத்தவும் அரசு விசேட காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாக இராணுவ தலைமையகம் தெரிவித்தது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தவின் விசேட பணிப்புரைக்கமைய இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலின்போது கொல்லப்படும் ஒருவருக்கு ஒரு லட்

[5ம் பக்கம் பார்க்க]

## அச்சுவேலி பகுதியில் தொடர்ந்து பதற்றம்

[கோப்பாய்]

அச்சுவேலிப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகிறது. அச்சுவேலி - பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இடமாற்றப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் இராணுவ தாக்குதல்கள் தொடர்வதாலும், இப்பாடசாலைக்குவரும் மாணவர்களின் தொகை குறைந்துள்ளது.

இப்பாடசாலை இடமாற்றப்பட்டு இப்போது அச்சுவேலி சரஸ்வதி பாடசாலையில் தற்காலிகமாக இயங்கிவருகின்றது. 166 இ

## வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

வடபகுதியில் மீண்டும் அமுல் படுத்தியிருக்கும் பொருளாதாரத் தடையை நீக்கிவிடுமாறு அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

'மேர்ஜ்' போன்ற அமைப்புக்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

வடபகுதியில் மீண்டும்ஆரம்பமாகியுள்ள யுத்தம் காரணமாக அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பொருளாதாரத் தடையை அமுல்படுத்துவதன் மூலம் அவர்களின் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது. அவர்கள் இன்று அங்கு சொல்லொணாத துயரங்களை அனுபவித்து வரு

(6-ம் பக்கம் பார்க்க)

## மக்களை இராணுவம் தாக்குவது குறித்து கண்டனம்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப்பகுதிகளில் பொதுமக்கள் இராணுவத்தினரால் தாக்கப்படுவது மனித உரிமை அமைப்புக்களின் பெரும் கண்டனத்துக்குள்ளாகியிருக்கின்றது.

போர் நடைபெற்று வரும் பகுதியில் சாதாரண மக்கள் இன்று இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு ஆளாகிவருகின்றனர்.

சர்வதேச விதிமுறைகளுக்கு இது முற்றும் எதிராகவே உள்ளது என அந்த அமைப்புக்கள் அரசுக்கு தமது கடும் எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளன.

-இ

## மனித உரிமை மீறலை கண்காணிக்க விசேட அதிரடிப்படை அமைப்பு

[கொழும்பு]

மனித உரிமைமீறல் செயல்களை கண்காணிப்பதற்கு விசேட அதிரடிப்படை ஒன்றை அரசு நியமிக்கவிருக்கிறது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்த விசேட படையணி அமைக்கப்படவுள்ளது.

தற்போது பெரும்பாலான தமிழர்கள் கைது செய்யப்பட்டு வருவதாகவும் அவர்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் அரசுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதன் காரணமாக மனித

[5-ம் பக்கம் பார்க்க]

## ம. எண்ணெய், மா வழங்க ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

திருகோணமலையிலிருந்து ஹபரண கப்பல்மூலம் எடுத்துவரப்பட்ட மா, கூட்டுறவுச் சங்க கிளைகள்மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு கிலோ மா 8ரூபா 50 சதவீதம் ஒரு குடும்ப அட்டைக்கு 5 கிலோ மா வழங்கப்படும். அத்துடன் கொழும்பிலிருந்து மாஹோ கப்பல்மூலம்எடுத்துவரப்பட்ட

[5-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

பழைய பித்தளை, அலுமனியம் உயர் விலைக்கு வாங்கப்படும். விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்: சிவன் மாடம். 166, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-1495)

### இன்று வியாழமாற்றம்

இன்று சனிமாற்றம் ரூபா 10/- யோகர்சுவாமிகளின் தெய்வீக வரலாறும் அடங்கியது (ஆத்மஜோதி- திரு. நா. முத்தையா எழுதியது) துர்க்கா ஸ்ரேசனர்ஸ், சுன்னாகம் (ஏ-1499)

### புலோலியில் சிரமதானம்

(நெல்லியடி)

புலோலி தெற்கு ஆனை விழுந்தான் சந்தியில் பழுதடைந்த நிலையில் இருந்த பொதுக்கிணறு கடந்த வாரம் புலோலி தெற்கு இளைஞர்களினால் துப்பரவு செய்யப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 160 கி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—06—02**

வெள்ளி இரவு

08-02 - கலைமஞ்சரி- நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம் அறிமுகமாவது தமிழததாய் வெளியீடான ''வானம் எம்வசம்'' கவிதைத் தொகுதி. அறிமுகத்தை யடுத்து சிறுகதை செல்வி பிமறமினி சபாரட்ணம் எழுதிய ''பிசாசுகள்'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை தமிழ்க்கவி எழுதிய 'உன்னை நீ காப்பாற்று" ஆகியன கலைமஞ்சரியை அலங்கரிக்கும்.
08-25 - கணப்பொழுது நாமகள் எழுதிய ,'கப்டன் யேசுதாஸ்''
08-30 - செய்திகள்
08-40 - தாயகப் பாடல்கள்
08-50 - ஏர்முனை நிகழ்ச்சியில் ''உலக சூழல்தினம்' சித்திரம்

**1995—06—03**

சனி காலை

07-02 - மாவீரவணக்கம்
07-15 - நீங்கள் கேட்டவை
07-30 - செய்திகள்
05-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—06 -02**

வெள்ளி மாலை

05-01 . சிந்தனைச்சிதறல்
05-02 - எழுச்சிக்கீதம்
05-10 - புதியவை
05-15 - கணநேரக்காவியங்கள்
05-30 - மண்ணின் குரல்
05-40 - நேயர் கடிதம்
05-45 - வெற்றிச் சுவடுகள்
06-00 - சிந்தனைக்கு சிலவிநாடிகள்
06-02 - தொடர்நாடகம் ''பொம்பிளை பார்க்கப்போறம்'' அங்கம் -04
06-15 - விளையாட்டுச் செய்திகள்
06-25 - என்தெரிவு

## யாழ். பிரதேசசெயலர் பிரிவில் 4660 குடும்பங்கள் கால்நடை வளர்ப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் பிரதேசச் செயலர் பிரிவில் 4,660 குடும்பங்கள் கால்நடைகளை வளர்த்து வருகின்றன.

இதில் 432 மாடுகளும், 4 021 ஆடுகளும், 19,536 கோழிகளும் யாழ், பிரதேசச் செயலர் பிரிவில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

மொத்தம் 4,660 குடும்பங்கள் இக்கால்நடைகளை வளர்த்துத் தமது சுயதொழிலை மேற்கொண்டு வருகின்றனர். 170 ரி

## பதவி வெற்றிடம்

### நிர்வாக உத்தியோகத்தர்

கீழ் காணும் பதவிக்குரிய வெற்றிடத்தை நிரப்புவதற்கு எம்மால் விளம்பரப்படுத்தப்பட்ட திகதியில் 06-06-1995 காலை 10-00 மணிக்கு இந்தப் பதவிக்குரிய தகைமைகளையுடைய பொருத்தமான அபேட்சகர்கள் விண்ணப்பங்களுடனும், சுயவிபரங்களுடனும், கல்விச் சான்றிதழ்களுடனும, குணநலச் சான்றிதழ்களுடனும் நேர்முகப் பரீட்சைக்கு தமிழீழ நிர்வாக சேவை நடுவப் பணியகத்திற்கு வருகை தரவும்.

01. தமிழீழ பிரஜையாக இருக்கவேண்டும்.
02. பொருத்தமான கல்வித்தகைமையுடையவராகவும் தேகாரோக்கியமுடையவராகவும் இருக்கவேண்டும்.
03. மோட்டார் வண்டி ஓடக்கூடிய தேகாரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும்.
04. வயதெல்லை 35–60 வருடங்கள்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முகாமைத்துவப்பட்டம் பெற்றிருக்கவேண்டும். அல்லது ஏதாவது ஒன்றில் பட்டம் பெற்றவராகவும், திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்கள்/அரசசார்பற்ற நிறுவனங்களின் நிர்வாக உத்தியோகத்தரத்திலான பதவியில் 10 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் அல்லது இலங்கை நிர்வாக சேவையில் பரீட்சையில் தேர்ச்சி அல்லது இவைகளுக்கு சமமான தகுதியும், அனுபவமும் இருக்கவேண்டும்'

தமிழீழ நிர்வாக சேவை

தமிழீழம்

எ-4966

## எழுதுவினைஞர் பரீட்சையில் 18 யாழ். ஊழியர் சித்தி

[மானிப்பாய்]

அரச திணைக்கள சிற்றூழியர்களை எழுதுவினைஞர்கள் தரத்திற்குப் பதவி உயர்த்துவதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இருந்து தோற்றியோரில் 18 பேர் சித்தியடைந்துள்ளனா.

அலுவலக ஊழியர்களை எழுதுவினைஞர் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை கடந்த ஒக்டோபர் மாதம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இப் பரீட்சைக்குத் தோற்றியோர் யாழ் செயலகத்தில் ஒருவரும் வ்வசாயத்திணைக்களத்தில ஒருவரும் சித்தியடைந்துள்ளனர். ஏனையோர் பிரதேச சபைகளைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களது பெயர் விபரங்களடங்கிய பட்டியலொன்று வடக்கு கிழக்கு மாகாண சபையினால் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ். செயலகத்தில் இம் மாதம் யூன் 10 -ந் திகதி நடைபெறவுள்ளதாக தெரிய வந்துள்ளது. 71 கி

## நல்லை தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய அரங்கம்

(யாழ்ப்பாணம்)

நல்லைத் தமிழ்ச் சங்கம்நடத்தும் இலக்கிய அரங்கம-09 எதிர்வரும் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ''கவிஞர் விடிவெள்ளி அரங்கு'' நல்லூர் ஸ்தான சி. சி த. க. பாடசாலையில் கவிஞர் வே. ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வரவேற்புரையை சங்க அமைப்பாளரும் வாழ்த்துரையை திரு. சி. வைகுந்தசாமியும் தொடக்கவுரையை கலாநிதி நா. சுப்பிரமணியமும் வழங்குவர்,

இதனைத் தொடர்ந்து 'நினைவழியா நாட்கள்' என்ற தலைப்பில கவியரங்கமும் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் ''கவிதைகளில் சமூக விடுதலையா இனவிடுதலையா மேலேங்கி நிற்கின்றன'' என்ற பொருளில் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளன. ர -ரி

## சின்னத்தம்பி ப்புலவருக்கு கல்வளையில் சிலை

(உடுவில்)

'கல்வளை அந்தாதி' பாடிய கல்வளையைச் சேர்ந்த சின்னத்தம்பிப் புலவருக்கு அவரின் ஞாபகார்த்தமாக உருவச் சிலை ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கல்வளைப் பிள்ளையார் ஆலயக் கும்பாபிஷேக விழாவின் போது இச்சிலை திறந்துவைக்கப்பட்டது.

மற்படி ஆலயத் தர்மகர்த்தாச் சபயின் தலைவர் திரு. நித்தியானந்தன் சிலையைத் திறந்து வைத்தார்.

பண்டிதர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பிப் புலவரின் சேவைகள் பற்றி உரையாற்றினர்.

தமது 15வது வயதில் கல்வளை அந்தாதி பாடிய சின்னத்தம்பிப் புலவரின் இயற்பெயர் வில்வாரயசெய்துங்க முதலி என்பது குறிப்பிடத்தக்கது. 109 கி

தில்லையம்பதியாள் துணை

கோண்டாவில் தில்லையம்பதி

## அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள்திருக்கோயில்

# வைகாசி மஹோற்சவ பெருவிழா-1995

03 – 06 – 1995 தொடக்கம் 14 – 06 - 1995 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 03 - 06 - 1995 | சனி | காலை | 10 மணி | கொடியேற்றத்திருவிழா |
| 08 - 06 - 1995 | விபாழன் | பாலை | 5 மணி | வசந்த உற்சவ திருவிழா |
| 10 - 06 - 1995 | சனி | பிற்பகல் | 2 மணி | வேட்டைத்திருவிழா (ஸ்ரீஞான வைரவர் ஆலயத்தில்) |
| 10 - 06 - 1995 | சனி | மாலை | 6 மணி | சப்பறத்திருவிழா |
| 11 - 06 - 1995 | ஞாயிறு | காலை | 10 மணி | தேர்த்திருவிழா |
| 12 - 06 - 1995 | திங்கள் | காலை | 12-30 | பூரணைத் தீர்தத்த் திருவிழா |
| 13 - 06 - 1995 | செவ்வாய் | பகல் | 12 மணி | மகேஸ்வரபூசை அன்னதானம் |
| 13 - 06 - 1995 | செவ்வாய் | இரவ | 6 மணி | பூங்காவனத் திருவிழா |
| 14 - 06 - 1995 | புதன் | காலை | 6 மணி | பிராயச்சித்த அபிஷேகம் |
| 14 - 06 - 1995 | புதன் | இரவு | 7 மணி | வைரவர் பொங்கல் விழா |



★ மாகோற்சவ காலங்களில் இரவு 7-30 மணி தொடக்கம் 8-30 மணி வரை

தெய்வீகப்பேருரை நிகழ்த்துபவர்: சிவநெறித்தொண்டன்

செ. சத்தியமூர்த்தி (பி. எஸ். சி) ஆசிரியர்

விடயம்: ஸ்ரீ சிவமகாபுராணம்

மகோற்சவத்தை முன்னிட்டு தினமும் ஈழத்தின் புகழ் பூத்த தவில், நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரியும் இடம்பெறும்

இங்ஙனம்

திருக்கோயில் பரிபாலன சபை

தில்லையம்பதி
2 - 06 - 1995

(ஏ-4970)

**மணிவாக்கு**

மௌனம் அறிவிற்கு அழகு; பொறுமை திறமைக்கு ஏற்றது.

— கவி காளிதாசன்

## நமது நோக்கு

### பொருளாதாரத் தடை!

பத்துக் கிலோவிற்கு அதிகமான பொருட்களைத தாண்டிக்குளம் ஊடாக வடபகுதிக்கு கொண்டுவர முடியாதென்று வவுனியாவிலுள்ள இராணுவம் தடை விதித்துள்ளது. தடையற்ற பொருட்களின் மீதுதான் இக்கட்டுப்பாடு.

இது மட்டுமல்லாமல், வடக்கே எடுத்து வருவதற்கு மேலும் பத்துப் பொருட்கள் மீது வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகாயலே, வவுனியா இராணுவ இணைப்பதிகாரி அவை மீது இம்மாத நடுப்பகுதியிலிருந்து தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறாராம்.

இதுபோலவே கிழக்கிலும் பெருந்தெருக்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கடைகள் வைக்கப்படாது என்று அங்கு இராணுவம் அடாவடித்தனம் செய்கிறது. காரணம் என்னவென்றால் தங்கள் கண்காணிப்பில் இல்லாத கடைகளில் புலிகள் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிவிடுகிறார்களாம். இவ்விதம் கூறுவது ஒரு புறத்தில் கிழக்கு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதைநிரூபிக்கிறது. அதற்குச் சான்றாக கிழக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் காடுகளில் ஆங்காங்கே தனித்தனியாக அமைந்திருக்கும இராணுவ முகாம்களை மூடிவிட்டுக் கூடிய பாதுகாப்புடன் உள்ள பெரிய முகாம்களுடன் சேர்த்துக்கொள்வதென அரசுமுடிவெடுத்துள்ளது.

இராணுவப் பலவீனம் மாத்திரமல்லாமல் தமிழ் மக்கள் மீது வெல்ல முடியாதபோரைத் தொடங்கி இருக்கும் சந்திரிகாவின் அரசு தமது இயலாமையின் காரணமாக முழு அளவிலான பொருளாதாரத் தடையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது.

இதற்கிடையில் சந்திரிகா தமிழ் மக்கள் மீது கட்டுப்பாடற்ற கருணை காட்டுவதாக நடித்தும் காட்டுகிறார் அவர் தனது பேச்சுக்களிற் குறிப்பிடுவதும், **உதிரித் தமிழ்க்குழுக்களை அழைத்து தீர்வுகள் பற்றி ஆராய்வதும் அவரின் கபடத்தனத்தை,** போலித்தனத்தை எடுத்துக்காட்டுகிறது. இதை அறிந்துகொள்ளாதவர்கள் போல் பிறநாட்டு அரசுகளும் நடந்துகொள்வதே மிகவும ஆச்சரியத்துக்கு உரிய செயலாகும்.

பொருட்களை அனுப்புகிறோம் என்று பிரபலமாக கூவிக்கொண்டு பொருட்கள் கப்பல்களில் ஏற்றப்படுகின்றன. பின்னர் கப்பலில் ஆயுதம் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதென்று அப்பொருட்கள் திருப்பி இறக்கப்படும். கப்பலின் பயணமும் வடக்கிற்கு பொருள்கள் வருவதும் நிறுத்தப்படும் வக்கிர புத்தியுடன் இராணுவம் நடத்தும் இந்நாடகம் அரசின் முழு அனுசரணையுடன்தான் நடக்கிறது: **இது தமிழ்மக்களை எங்கே இட்டுச்செல்லும். தமிழீழத்துக்குத் தான்.**

# தற்போதைய அரசாங்கத்தினால் புலிகளைத் தோற்கடிக்க முடியாது!

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தினால் விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்கமுடியாது என்று ராவய பத்திரிகை தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது,

அக்கட்டுரையில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: சிங்கள மக்களின் ஆதரவை வடக்கு கிழக்குப் போருக்கு பெறுவதற்காக சிங்களபௌத்தர்களின் உரிமைகளைத் திடப்படுத்த போரை நடத்துவதாக ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார். சிங்கள பௌத்தர்களின் உரிமை பற்றிக்கூறும் சந்திரிகா அரசால் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காணமுடியாது,

இலங்கை ஒரு பௌத்த நாடு பௌத்தர்களுடன் சேர்ந்தே ஏனைய இனங்கள் வாழ வேண்டுமெனப் பழைய தலைவர்கள் கூறிய வழியிலேயே சந்திரிகாவும் செல்கின்றார்.

விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதால் இனப்பிரச்னையைத்தீர்க்கமுடியும் என அவர் நினைக்கிறார். விடுதலைப் புலிகள் உருவானதும் வளர்ந்ததும் இனப்பிரச்னையினால் தான் என்றும் அந்தக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ம:ரி

# இராணுவம் மனித உரிமைகளை மீறிச் செயற்படுவதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை இராணுவம்மனித உரிமைகளை மீறி வருகின்றது என்று நீதிக்கும் சமத்துவதற்குமான இயக்கம் இலங்கை அரசை குற்றம் சாட்டியுள்ளது,

அரசு தற்பொழுது வன்முறையில் இறங்கியிருப்பதால் பொதுமக்கள பாதிக்கப்படுகிறார்கள் என்று இந்த குழு இலங்கை அரசை கடுமையாக விமர்சித்துள்ளது,

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் படையினரின் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக கிழக்குமாகாண நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார்.

இராணுவ நடவடிக்கைகள் மற்றும் தேடுதல் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது இப்பகுதியிலுள்ள அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள்.

வீதிகளில் மட்டுமல்ல வீடுகளில் கூட இப்பகுதி மக்கள் நிம்மதியாக வாழமுடியாத நிலையேறபட்டுள்ளதாம்.

கிழக்கில் படையினரால் நடத்தப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து பலர் தமது எதிர்ப்பையும் கண்டனங்களையும் தெரிவித்துள்ளனர். ம-ரி

# உலகில் ஒன்றரைக் கோடி அகதிகள் 116 நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்

[லண்டன்]

உலகில் ஒன்றரைக் கோடிக்கும் அதிகமான அகதிகள் 116 நாடுகளில் அடைக்கலம் தேடிச் சென்றுள்ளதாக உலக அகதிகள் பற்றிய புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

உள்நாட்டு மற்றும் நாடுகளுக்கிடையிலான கொடூர யுத்தத்தினால் பாதிக்கப்பட்டே இவர்கள மேற்படி நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். மேலும் போரினால் பாதிக்கப்பட்ட இரண்டரைக் கோடிக்கும் மேறபட்ட மக்கள் வெளிநாடுகளுக்கு செல்ல முடியாத நிலையில் உள்நாடுகளிலேயே இடம்பெயர்ந்து மோசமான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள்'

குறிப்பாக ஆசிய ஆபிரிக்கா முன்னாள் கம்யூனிஸ் நாடுகளை சேர்ந்தவர்களே லட்சக்கணக்கில் தமது நாடுகளை விட்டு வெளியேறி ஐரோப்பிய 'நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் இவர்களால் ஐரோப்பிய நாடுகள் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்குவதால அந்நாடுகளுக்கு இவர்களுக்கு அகதிகள் அந்தஸ்து வழங்க மறுத்து வருவதுடன் இவர்களை தத்தமது நாடுகளைவிட்டு வெளியேற்றவே நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அண்மைக்காலமாக உலகின் பல பகுதிகளிலும உள்நாடுகளுக்குள் யுத்தங்கள் நடைபெற்றுவருவதால் அகதிகளின் தொகையும் பலமடங்கு அதிகரித்து வருவதாகவும் அப்புள்ளி விபரம் தெரிவிக்கின்றது .ம,ஜ-ரி

## வெள்ளி விருந்து

### மனத்தின் இயல்பு

நம்மிடத்து அமைந்துள்ள ஐம்புலன்கள் மூலம் இவ்வுலகை நாம் அறிகின்றோம். அந்த ஐம்புலன்களோடு மனது சேரும்பொழுதுதான் நமக்கு உலகு புலனாகின்றது. உலகு மயமாக இருக்கும் கடவுளின் மகிமையை ஐம்புலன்களின் உதவியாலும், மனததாலும் ஓரளவு உணர்ந்து இரசிக்கலாம்.

**சந்திர**னது ஒளி **சந்திர**னுக்குச் சொந்தமன்று. சூரியனிடமிருந்து ஒளியைப்பெற்றே சந்திரன் பிரகாசிககின்றது. ஆனால — அச்சந்திரனது ஒளியில் சந்திரனது தன்மை சேர்ந்து, அவ்வொளி குளிர்ச்சி பொருந்தியதாக உள்ளது.

பரம்பொருளிடம் இருந்து அறிவையும், ஆனந்தத்தையும் பெற்று இன்பம் அடைகின்றோம். ஆனால் நாம் பெறுகின்ற அறிவிலும், ஆனந்தத்திலும் நம் மனத்தின் இயல்பு கலந்திருக்கிறது. சிற்றியல்பு படைத்த மனதால் பெறுவது சிற்றறிவும், சிற்றின்பமும், பேரியல்பு படைத்த மனதால் பெறுவது பேரறிவும், பேரின்பமும். காம விகாரமுடையவன் ஒரு பெண்ணைப் பார்த்துப் பெறுவது சிற்றின்பம். இராமகிருஷ்ணர் ஒரு துஷ்டப் பெண்ணைப் பார்த்து விகாரமடையவில்லை; அவர் சமாதிநிலையடைந்தார் அவர் உள்ளம் பேரியல்பு பெற்றிருந்ததே காரணம்!

—'தர்மசக்கரம்'—11-4

# குடியேற்றங்களிலிருந்து சிங்களவர் வெளியேற்றம்

(திருகோணமலை]

அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களில் இருந்து மக்கள் வெளியேறி தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதாகத் தெரிவிக்கபபட்டுள்ளது,

இவர்களின் வெளியேற்றத்தை படையினர் தடுத்து நிறுத்தி வருகின்ற போதிலும் சில பொதுமக்கள் படையினரின் வார்த்தைகளை அசட்டை செய்வதோடு படையினருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்,

புலமோட்டையில் பொது மக்கள் தம்மை சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன,

கடும் நிபந்தனையின் பேரில் தினமும் 50 குடும்பங்கள் வீதம் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறப்படுகிறது. ம-ரி

# இனப்பிரச்னைத் தீர்வுக்கு பிறநாடுகளின் மத்தியஸ்தம் எதிர்பார்க்கக் கூடாது

(கொழும்பு)

இலங்கையின் ஆயுதப் போரை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கு பிற நாடுகளில் மத்தியஸ்தத்தை இலங்கை அரசு எதிர்பார்க்காமல் இருப்பதே நல்லது என்று அவுஸ்திரேலியா வெளியுறவு அமைச்சர் கலித் தீவான் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த இவர் மேற்கண்டவாறு இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. ம-ரி

பயிரின் கழிவும் பயன்தரு உரமே.

## முதலுதவி பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் வலி-வடக்குப் பிரிவினால், முதலுதவிப் பயிற்சி நெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் சேர விரும்புவோர், தங்கள் பெயர் விபரங்களைப் பிரிவுக் காரியாலயத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். சி

# இராசி பலன்

**02-06-1995**

வெள்ளிக்கிழமை

[தமிழுக்கு வைகாசி-19]

சதுர்த்தி: முன்னிரவு 10-07 வரை. புனர்பூசம்: பிற்பகல் 5-14 வரை. சித்தயோகம், சதுர்த்தி விரதம், இராகு காலம்: காலை 10-22 முதல 11-52 வரை. சுபவேளை: காலை 5-52 முதல் 7-22வரை

மேடம்: வேண்டாத தொல்லை, அவமதிப்பு, அலைச்சல்.

இடபம்: முதியோர் அறிவுரை, காரிய சித்தி, பயனுள்ள செயல்.

மிதுனம்: உறவில் விரிசல், தொழில் நஷ்டம், அலைச்சல்.

கடகம்: விருந்தோம்பல், மன மகிழ்ச்சி, உல்லாசம்.

சிங்கம்: வாய்ப்புத் தவறுதல்' கடன்படல், குடும்பச் செலவு.

கன்னி: இனசன மகிழ்ச்சி, பண வரவு, பயண நன்மை.

துலாம்: கருத்தொற்றுமை நன்மதிப்பு, மன நிறைவு.

விருச்சிகம்: தொழில் வெறுப்பு, காரிய தாமதம், முரண்பாடு

தனுசு: கெட்ட பெயர், வழிப் பயம், தவறான சிந்தனை.

மகரம்: நினைத்ததைச் சாதித்தல், அதிகாரிகள் உதவி விருந்துண்ணல.

கும்பம்: கடமை உணர்வு, பெற்றோர் கவலை, தெய்வீக வழிபாடு.

மீனம்: விதண்டாவாதம், அகம்பாவம், பதற்றநிலை,

— ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

மரப்பால் — I

மனித, மிருகப்பால்போல மரத்திலிருந்து கிடைககும் பால் மருததுவப் பயன் உடையது.

ஆலம்பால் :

உடலுக்கு வலிமை தரும்; மேக நோயைப் போக்கும்; ஆடும் பல்லை இறுக்கும்; மூளையழற்சியைத் தணிக்கும்

அத்திப்பால் :

குளிர்ச்சியுடையது. தெம்மை காரணமான நீரிழிவு, சூலை, மூலச்சூடு, பித்தம் ஆகியவற்றைப் போக்கும்.

பேயத்திப் பால் :

கால் வெடிப்பு, மேகப்படை, பெருநோய்த்தடுப்பு, மூளைப் புண் ஆகியவற்றைப் போக்கும்.

புங்கம் பால் :

உடலின் மினுமினுப்பை உண்டாக்கும்; புண்களை ஆற்றும்; ஆனால்... வாயுவை உண்டாக்கும்.

கள்ளிப் பால் ;

கை, கால் பிடிப்பு, பெருநோய், குளிர்மை, உடலில் உள்ள பூச்சிகள் ஆகியவற்றைப் போக்கும்.

சதுரக்கள்ளிப் பால் :

பெருநோய், கடுஞ் சூலை, வாத நோய்கள், புழு நெளியும் புண்கள் ஆகியவற்றை ஒழிக்க உதவும்.

இலைக்கள்ளிப் பால் :

செங்கரப்பான், காது நோய், பெருஞ்சூலை, உடலின் உட்புற, வெளிப்புற நோய்களைப் போக்கும்!

— மயூரன்

# இலங்கை; ஒரேநாடு என்ற நிலையிலிருந்து விடுபட்டுவிட்டது

(நேற்றைய தொடர்ச்சி]

நாலு பிரிவினைப் போராட்டங்களும் முடிவடைந்துள்ளது. ஆனால் அங்கே அந்நாடுகள் இரண்டாக பிரிந்தபின் தான் சமாதானம் நிலவிற்று

இன்னும் 4 நாடுகளில் பிரிவினைக் கெரில்லா போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு சமாதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவுள்ளன. மேற்கு சகாரா, சூடான், பிலிபைன்ஸிலுள்ள மின்டாஞே, வட அயர்லாந்து ஆகிய நாடுகளே அவையாகும்.

இவற்றில் முதல் மூன்றிலும் கெரில்லாக்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கணிசமான பிரதேசங்களை வைத்துள்ளார், எல்லாவற்றிலும் பலமாகவுள்ளனர்.

வட அயர்லாந்தில் ஐ.ஆர். ஏக்களை ஆயுதங்களை கீழே போடுமாறு கேட்டபோது மற்றைய தரப்பினரையும் ஆயுதங்களை கீழே போடுமாறு ஐ.ஆர்.ஏ. கேட்டது அதுமாத்தரமல்ல வட அயர்லாந்தில் நிலை கொண்டுள்ள பிரிட்டிஷ் துருப்புக்களையும் நாட்டை விட்டு வெளியேறுமாறு ஐ. ஆர். ஏ. கேட்டது.

பிரிவினைக்கான போராட்டங்கள் இப்போதும் பல நாடுகளில் முன்னணி வகிக்கின்றது. இந்த வகையில் சிறிலங்காவும் அதில் ஒன்று மியன்மாரில் (பர்மாவில்) 40 வருடங்களாக மலையாதியினர் போராடி வருகிறுர்கள்.

இந்தியாவில் - காஷ்மீர், பஞ்சாப், அசாம் ஆகிய இடங்களில் இதேபோல் போர் நடைபெறுகிறது. இவற்றில் எவ்விடங்களிலும் மரபுவழியாக போரிடும் அரச படையினர் கெரில்லாக்களை வென்று சரணடைய செய்ததாக வரலாறு இல்லை. அல்லது அந்த கெரில்லாக்களை, சுய ராச்சிய கோரிக்கையை கைவிட்டு ஒரு குறைந்த மாற்றீட்டுக்கு சம்மதிக்கச் செய்யகூடியதாக அவர்களை கொண்டுவந்ததுமில்லை.

இதன் அர்த்தமென்னவெனில் குறைந்த வொரு தீர்வுக்கு இணங்கிவந்தால் கெரில்லா படையை கலைத்து விட வேண்டும். ஒரு அரசில் இன்னொரு படைப்பிரிவு இருக்க இயலாது என்பதால் கெரில்லாக்கள் ஆயுதங்களை கைவிட வேண்டும். இந்த வகையில் பிரிவினைக்கு போராடும் எந்த செரில்லாக்களும் தங்களை கலைத்ததாகவோ ஆயுதங்களை கீழே போட்டதாகவோ இல்லை, பிரிவினைக்கு போராடும்செரில்லாப்போரை பார்த்தால் 'ஒருமுறை ஆயுதமெடுத்தால் அதை கைவிடப் போவதில்லை'' என்று கூற்றை நிரூபிக்கச் செய்யும்.

இந்த உண்மையை உணர்ந்தால் -இலங்கையில் ஏற்பட்ட திருப்பு முனையில் ஒருமுறை தரையிலிருந்து விண்ணுக்கு ஏவும் ஏவுகணையை எடுத்தவர்கள் தொடர்ந்து அதனை பாவிப்பார்கள் என்பது உண்மை.

### 3-வது ஈழப் போர்

இலங்கையில் நடைபெறும் போரின் செலவு பற்றி மாறுபட்ட கணக்கு தரப்படுகிறது. ஒரு நிமிடத்திற்கு 41 ஆயிரம் ரூபா செலவாகிறதென ஜனாதிபதி கூறினார். அப்படியாயின் வருடத்திற்கு 21 1/2 பில்லியன் ரூபா செலவாகும் அதே நேரம் 1994 ஆம் ஆண்டில் போர்ச் செலவு 29 பிலலியன் ரூபா என பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்த

[உலகில் அடக்கப்பட்ட ஓர் இனம் பிரிவினை கோரி நடாத்திய கெரில்லாப் போராட்டம் தோல்வி அடைந்ததாக வரலாறு இல்லை. இக்கெரில்லாப் போராட்டங்களின் வெற்றி குறித்து 'சுவுடே லீடர்' பத்திரிகையில் அட்ரியன் விடேமான என்பவர் எழுதிய கட்டுரையின் பின் பகுதி இங்கு தரப்படுகின்றது ]

கூறுகிறார். பிரிட்டிஷ் அரசு எங்கள் நாட்டிலும் பார்க்க 10 மடங்கு பெரியது. அது 3.25 பில்லியன் பவுணை அயர்லாந்து சண்டைக்கு செலவு செய்கிறது.

இங்கு இராணுவ அதிகாரிகள் கேட்கும் நிதியை கொடுக்காமல் அரசு, மாற்றுந் தாய் மனப்பான்மையை காட்டுவதாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

செரில்லா போரை கையாள்வதில் ஏனைய இடங்களில் இருப்பதிலும் பார்க்க 6 இல் ஒரு பங்கினரே இங்கு காணப்படுகின்றனர். இதன்படி 4 மடங்கு அல்லது 6 மடங்காக படை அணியை அதிகரித்தால் 160 பில்லியன் ரூபாவாக வருடாந்த செலவு அதிகரிக்கும்.

இதற்கு தற்போதைய அதிகூடிய செலவை ஏற்படுத்தும் சிவில் அரசை மாற்றி இராணுவ ஆட்சியை கொண்டுவர வேண்டும். இருந்தும் வெற்றியளிக்கும் என்பது நிச்சயமில்லை. அதன் பிரதிபலிப்பு நம்பத் தகுந்ததாக அமையாது. ராணுவ ஆட்சிக்கு சர்வதேச அபிப்பிராயம் நலமாக அமையாது. மனித உரிமை மீறல்கள் அதிகரிக்கும் போது அயல்நாடான இந்திய தமிழ் நாட்டு உறவு பாதிக்கப் படும். இலங்கையைகளின் வெற்றிக்கு மாறாக ஒரு சரிவு நிலை ஏற்படும்.

இதன் முடிவு, போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஒரு போர் அதாவது 'செய் அல்லது செத்துமடி'' என்ற முடிவுக்கு வரவேண்டிய நிலை ஏற்படும். இது எமது இராணுவ அல்லது நிதி நிலைக்கு அப்பாற்பட்டதாகும். மேலும் இச்செயல் சமாதான முயற்சிக்கு மாற்றீடான இன்னொரு செயற்பாடாக கருதமுடியாது.

12 வருட கால போர் அனுபவம் பின்வரும் முடிவுகளை தந்துள்ளது: அதாவது இலங்கை ஒரே நாடு என்ற நிலையிலிருந்து விடுபட்டு விட்டது. இராணுவ நடவடிக்கை மூலம் மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவது இயலாத காரியம். உலகத்தில் பிரிவினைக்கு போராடும் எந்தவொரு கெரில்லா அமைப்பையும்விட புலிகளிடம் தான் தரையிலிருந்து விண்ணுக்கு செலுத்தும் ஏவுகணை உண்டு இதனை இராணுவ அழுத்தத்தின் மூலம் அடக்கிவிடமுடியாது. நிரந்தரமாக இந்த நாட்டில் இராணுவ நிலை இருக்குமென்று உறுதியாகி விட்டது. ஆகவே இருதரப்பினரும் இராணுவ தோல்வியுற்ற நிலையில் தத்தம் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்து கொண்டு சமாதான பேச்சுவார்த்தையை மேற்கொள்ளலாம்.

யதார்த்தமான இந்த அடிப்படையில்தான் சமாதானத்தை அடைய முடியும். இதுகாலவரை ஆட்சி செய்த அரசுகளாலும் தற்போதைய அரசிலும் இந்த உண்மை நிலை சிங்கள மக்களுக்கு மறைக்கப்பட்டு வந்துள்ளன. இந்த யதார்த்தம் நிலையற்றதென்று கூறி போலியாக நடித்தலில் அவர்கள் பதவியில் இருக்க ஏதுவானது; ஏதுவாகிறது.

இந்தகாலகட்டத்தில் சாதாரணமான அனுபவவாயிலாக இந்த உண்மை நிலை

[5-ம் பக்கம் பார்க்க]

## வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணியில் இயங்கி வரும் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்திய சாலைக்கு, யாழ். சுகாதாரப திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினர் கடந்த வாரம் மருந்து வகைகளை விநியோகம் செய்துள்ளனர்.

இவ்வருடம் 2ம் கந்தாயத்திற்கான மருந்து வகைகளே இவ்வாறு விநியோகம் செய்யப்பட்டது என்றும், பனடோல் உட்படப் பல முக்கிய மருந்து வகைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. 72

## 245 விதவைப் பெண்களுக்கு றெட்பாறு உதவித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

றெட்பாறு சிறுவர் பாதுகாப்பு நிதியம் குடும்பத்தலைவர்களை இழந்த பெண்களுக்கான உதவி திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகிறது.

நல்லூர் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 245 விதவைப்பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்று வருகிறுர்கள். இந்நிறுவனம் சிறுவர் பாதுகாப்பை மையமாகக்கொண்டு செயல்பட்டு வருவதால் தெரிவுசெய்யப்பட்ட 245 விதவைப் பெண்களும் அவர்களில் தங்கி இருக்கும் சிறுவர்கள் மூலம் இவர்களுக்கான உதவித்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

இவர்களுக்கு உளவள மேம்பாட்டுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இவர்கள் வன்செயலால் பாதிக்கப்பட்ட தாய்மார்களுக்கான நலன்புரிச்சங்கத்தின் கீழ் அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறுர்கள். உலர் உணவுப்பொருட்கள் ஒவ்வொரு மதமும் இவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது, அத்துடன் குழந்தைகளுக்கான பாடசாலை உபகரணங்களும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் மேலும் 60 விதவைப்பெண்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறுர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. 162-ரி

## 10 வது தொடர் உணவு முத்திரைகள் விநியோகிக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்]

பத்தாவது தொடர்வறுமை நிவாரண உணவு முத்திரைகளை யாழ், செயலக சமூக சேவை பகுதி சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

வறுமை நிவாரண உணவு முத்திரைகளை உடனடியாக விநியோககிக்குமாறும் சமூக சேவைகள் பகுதி பிரதேச செயலகங்களை கேட்டுள்ளது.

தற்போது முத்திரைகள் தரம்பிரிக்கப்பட்டு எழுதும் வேலைகள் பிரதேச செயலகங்களில் இடம் பெற்று வருகின்றன.

இவை இன்னும் இரண்டு வாரகாலத்துக்குள் மக்களுக்கு விநியோகிக்கும் வேலைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. 170-சி

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் சமூகப்பணி தொடர்பான வடபிராந்திய நிறைவேற்றுச்சபைக் கூட்டம் நாளை 3ம் திகதி பி. ப. 3, 30 மணிக்கு பெருமாள் கோவிலடி மெய்கண்டதேவர் ஆதீனத்தில் சங்கீத பூஷணம் ச. ரி. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

### புதுவருட நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்]

தமிழ்சேதிட ஆய்வு ஒன்றியத்தின் புதிய வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தலைவர்; ஐ. வைத்தியநாதன் உபதலைவா: எஸ், பத்மநாதன் டாக்டர் ரி, வெற்றிவேல் செயலாளர் டாக்டர் வ. சிவராசா உபசெயலாளர்: எஸ், சி. இம்மனுவேல் பொருளாளர்; த. சச்சிதானந்தன் நிர்வாக சபை உறுப்பினர்களாக 9பேரும் தெரிவு செய்யப்பட்டனர். சி

### வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வடமேற்கு கோட்டையம்பதி ஸ்ரீசிவசுப்பிரமணிய தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 10ம திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு இரதோற்சவமும், ஞாயிறு காலை 9-30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். மகோற்சவ காலத்தில் தினமும் இரவு 9 மணி முதல் 10 மணி வரை, 'கந்தபுராணம்' பற்றி காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு. த. சிவகுமாரன் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார். ர சி

## கரையோர மீனவர்களுக்கு இலவச நிவாரணம்

[யாழ்ப்பாணம்[

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் கரையோர பகுதி மீனவர்களுக்கு இலவச நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

பாஷையூர், கொழும்புத்துறை, குருநகர்' நாவாந்துறை, மறக்கிளைமேசன், கோட்டை, கொட்டடி போன்ற கரையோரபகுதி மீனவர்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இந்த கரையோர பகுதியில் வறுமைகோட்டிற்கு கீழ் வாழும் மீனவர்களுக்கே இந்நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலகம் மேற்கொண்டுவருகின்றது. வறுமை கோட்டின் கீழ் வாழும் மீனவர்களின் விபரங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு செயலக திட்டப்பணிப்பாளர் யாழ். பிரதேச செயலரை கேட்டுள்ளாரி. 170 - சி

## மக்கள் நலன்புரிச் சங்க சேவைக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்]

சேவை செய்வதற்குப் பணம முக்கியமானதல்ல. இந்த வகையில் மக்கள் நலன் புரிச் சங்கம் தனது அயராத சேவையும் நற்பணிகளையும் மக்களுக்கு ஆற்றி வருகிறது.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மக்கள் நலன்புரிச் சங்க ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா மற்றும் முதலுதவிச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில்கலந்து கொண்டு உரையாற்றிய வடக்குக கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன திட்டப்பணிப்பாளர் திரு. எஸ்.எஸ். நேசராஜ் தமது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. எ. ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. நேசராஜ் தொடர்ந்து பேசுகையில் இன்றைய சூழ் நிலையில் மக்கள் நலன் புரிச்சங்கம் பலவகையான சிறந்த சேவைகளைச் செய்து வருகிறது. இந்த வகையில் இந்நிறுவனத்தினுல் நியமிக்கப்பட்டிருக்

(5-ம் பக்கம் பார்க்க)

### கிணற்றில்வீழ்ந்து மூதாட்டி மரணம்

[ஆனைப்பந்தி]

கிணற்றில் விழுந்து மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார் அரியாலை ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த அன்னம்மா [வயது 72) என்பவரே உயிரிழந்தவராவார்.

வீட்டிலிருந்து காணமற் போன இவர் நேற்றுக்காலை கிணற்றுள் சடலமாக காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். 101சி

### நிவாரண முத்திரைகள்

(ஆனைப்பந்தி)

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளிற்சுட்டப்பட்ட இடம்பெயர்ந்தோருக்கான புதிய நிவாரண முத்திரைகள் அடுத்த வாரம் வழங்கப்படலாமென தெரிய வருகின்றது.

25ஏ. 25பி, 26ஏ, 26பி, 27ஏ, 27பி ஆகிய ஆறு புள்ளிகளை உள்ளடக்கிய இப்புதிய முத்திரைகள் அந்தந்தப் பிரிவு கிராமசேவை அலுவலர்களினூடாக விநியோகிக்கப்படும். 101-சி

# யாழ்.மாவட்டத்திற்கு உணவுபொருள் எடுத்து வருவதில் கப்பல்கள் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்டத்திற்கு உணவுப் பொருட்களை ஏற்றி வருவதற்குத் தற்போது 'லங்கா கல்யாணி', 'லங்கா முடித்தா'. 'குமண' ஆகிய கப்பல்களே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. கோமாரி கப்பல் உணவுப் பொருட்களை ஏற்றி இறக்கும் சேவையில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மாகோ கப்பல் மண்ணெண்ணை பரல்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

ஹபரண கப்பல் திருமலையிலிருந்து மா ஏற்றிவரும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த ஐந்து கப்பல்களும் வடபகுதிக்குப் பொருட்களை ஏற்றிவரும் சேவையில் அமர்த்தப்பட்டும், கப்பல்களின் வருகையில் நீண்ட தாமதம் ஏற்படுகின்றது.

தற்சமயம் 6,000 பரல் மண்ணெண்ணையை ஏற்றிக்கொண்டு மாகோ கப்பல் நேற்று முன்தினம் பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்தது.

யாழ். மாவட்டத்தில் தற்போது உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகின்றன.

பருத்தித்துறைக்கு உணவுப் பொருட்களை ஏற்றிவரும் கப்பலின் தாமதத்தினால்தான் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் உணவுப் பொருட்கள் முடியும் தறுவாயில் உள்ளன.

லங்கா கல்யாணியில் உணவுப் பொருட்கள் ஏற்றப்பட்டு, கப்பல் நங்கூரம் போடப்பட்டுக் கொழும்புத் துறைமுகத்தில் தவம் கிடக்கின்றது.

இக்கப்பலில் இடம்பெயர்ந்தவர்களுக்கான உணவுப் பொருட்கள் எடுத்து வரப்படவுள்ளன. 170-ரி

# கொழும்பிலிருந்து விரைவாக பொருட்களை அனுப்ப நடவடிக்கை

## யாழ். அரச அதிபர் முயற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களைக் கொழும்பில் இருந்து விரைவாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளில் யாழ், அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அத்தியாவசியச் சேவைகள் தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு சென்றிருக்கும் அரச அதிபர். யாழ். குடாநாட்டில் நிலவிவரும அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு பற்றியும், இப்பொருட்களைக் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் யாழ். மாவட்டத்துக்கு விரைவாக அனுப்பி வைக்கப்படவேண்டியதன் அவசியம் பற்றியும் இக்கூட்டத்தில் வலியுறுத்தவுள்ளார்.

கொழும்பில் இருந்து அத்தியாவசியப் பொருட்களை எடுத்துவருவதற்கு ஏற்படும் தாமதம் காரணமாக யாழ். குடாநாட்டில் இப்பொழுது பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இதனால் பொருட்களின் விலை அதிகரித்திருப்பதாகவும், கொழும்பில் இருந்து பொருட்களை விரைவாக அனுப்புவது பற்றியும் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது 162 ரி


## அரசாங்க அறிவித்தல்

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

## மரத்தளபாடம் வழங்கல்

கீழே விபரிக்கப்பட்ட மரத் தளபாடங்கள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் என்னால் 13-06-95ஆம் திகதி பிற்பகல் 1-30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்:

01. வகுப்பு அறை மேசை (விரிவுரை மண்டப மேசை) இலாச்சி அற்றது 3' 5'' X 2' X 2' 6''
02. வாசிகசாலை மேசை 6' X 3' X 2' 4½''
03. விரிவுரை மண்டபக் கதிரை (மாணவருக்கு எழுத வசதியுடன்)
04. கதிரை சாதாரணம்
05, கதிரை கைபிடி
06. வாங்கு சார்மனை 6' X 18'' X 2' 10''
07. மருந்து ரொலி (இரும்பு)
08. குழந்தைகள் கட்டில்
09. சுழல் கதிரை
10. காரியாலய மேசை 4½' X 2½' X 2½'
11. விளம்பரப் பலகை 4' X 3'
12. ுாக்கை 4' X 5' X 1½' (மூன்று தட்டு)
13. பரிசோதனைக் கட்டில்
14. சாதாரண மேசை
15. வைத்தியசாலை லொக்கர்

மேற்படி கேள்விப் பத்திரங்கள் உங்களால் தயாரிக்கப்பட்டு உறையில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்படல் வேண்டும். அத்துடன் அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு மரத் தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்'' என்று குறிப்பிடப்படல் வேண்டும். இப்பத்திரங்கள் என்னால் 13-06-95ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது சமூகமளிக்கலாம். அல்லது எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை சமூகமளிக்க ஒழுங்கு செய்யலாம். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விதாரர் ஒரு மாத காலத்திற்குள் பொருட்களை வழங்கவேண்டும். இப்பொருட்களின் மாதிரிகளைப் பார்வையிட விரும்புவோர் எனது பணிமனையுடன் தொடர்புகொள்ளவும். தளபாடங்கள் யாவும் வேம்பு மரத்தினால் செய்யப்பட்டு இரு தடவை ''வாணிஷ்'' பூசப்படல் வேண்டும்.

வைத்திய கலாநிதி வை. ஸ்ரீ காந்தா
பதில் சுகாதார சேவைகள்
மாகாண பிரதிப் பணிப்பாளர்.

மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ-4955)


## சித்தமருத்துவ நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்]

யாழ் மாநகராட்சி மன்ற சித்த மருத்துவ நிலையத் திறப்பு விழா இன்று பி.ப 3.00 மணிக்கு யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளர் வே' பொ. பாலசிங்கம் தலைமையில் யாழ் மாநகராட்சி மன்ற வளவினுள் நடைபெறவுள்ளது,

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் சிறப்புவிருந்தினர்களாக வடக்கு கிழக்கு மாகாணசபை ஆயுள் வேதப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி பி,உ மாமகேஸவரன் யாழ் பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறை தலைவர் டாக்டர் எஸ் பவானி யாழ்ப்பாணம் பிரதேசச் செயலர் கலாநிதி குணராசா நல்லூர் பிரதேசச் செயலர் திருமதி கமலா சிவசிதம்பரம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். 162.ரி

## ம.எண்ணெய்

[1ம் பக்கத்தொடர்ச்சி]

மண்ணெண்ணை கூட்டுறவுச் சங்கக்கிளைகள் மூலம் ஒரு லீற்றர் 25 ரூபா வீதம் ஒரு குடும்ப அட்டைக்கு 2 லீற்றர் வீதம் வழங்கப்படுமென்றும் தெரிவித்தார். 162 இ

## கடும் ஷெல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து பலாலி இராணுவ முகாமிலிருந்தும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஏழாலை வடக்கு, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இச்ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இ-80

## இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வன்செயல், சகிப்புத்தன்மையின்மை ஆகியவற்றை நிராகரிப்பதன்மூலமே அமைதியான ஓர் சமுதாயத்தை கட்டி எழுப்ப முடியும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த யுத்த தவிர்ப்பு ஒப்பந்தம் மீறப்பட்டதையடுத்து பெறுமதிமிக்க மனித உயிர்கள் அநியாயமான முறையில் அழிக்கப்பட்டுள்ளமை குறித்தும் இலங்கை கத்தோலிக்க மேற்றிராணியார் சங்கம் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. க இ

# இன்று

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி சித்திவிநாயக ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரெண்டு நாள் அபிஷேகம் நடைபெறும். ர

0 0 0 0

[கொழும்புத்துறை]

யாழ். அரியாலை நீர் நொச்சிததாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 00 மணிக்கு சகஸ்ரநாம சங்காபிஷேகம் 1008 இடம் பெறும். 154

0 0 0

[அரியாலை]

யாழ். [நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் இன்று காலை 9.30 மணிக்கு தமிழ் விழா நடைபெறவுள்ளது இவ்விழாவில் பிரதம விருந்தினராக திரு. க. சொக்கலிங்கம் [சொக்கன்] கலந்து கொள்கிறார். 59

0 0 0

(கொழும்புத்துறை]

கொழும்புத்துறை மேற்கு புங்கன்குளம் வீதி வில்வைநந்பதி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவிலில் இன்று காலை 10.00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசையும் மாலை 6 00 மணிக்கு வைரவர் பொங்கலும் 8-ம் மடையும் பூசை வழிபாடுகளும் இடம் பெறும். 154

0 0 0

[யாழ்ப்பாணம்)

கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசுவாமி கோவில் மகாகும்பாபிஷேகம் இன்று காலை 6.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 9.00 மணிக்கு ஆலய பரிவர்த்தன மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறும். 154

0 0 0 0

[ஆனைப்பந்தி[

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தின் 'பரிசில் நாள் விழா' இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு அதிபா செல்வி கிருபா வீரசிங்கம் தலைமையில் நடைபெறும். 101

0 0 0 0

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலின் மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு நடைபெறும். 170

0 0 0

[வட்டுக்கோட்டை]

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய வைரவிழா இன்று பிற்பகல் 3.00 மணியளவில் வட்டுக்கோட்டை வீரபத்திரசிவன் கோவில் மேலை வீதியில் அமைந்துள்ள ''பழனியப்பாச் சட்டம்பியார்'' அரங்கில் அதிபர் நா,க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. 139-ரி

## மனித உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைமீறல் சம்பவங்கள் இடம் பெறுவதாகவும் அரசுக்குச் சுட்டிக் காட்டப்பட்டது.

எனவே இவ்விதமாகமனித உரிமை மீறல் செயல்கள் நடைபெறாமல் இருப்பதைக் கண்காணிக்கும் விதமாகவே இந்த விசேட படையணி அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ)

## படையினரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சம் ரூபாவும், நிரந்தர அங்கவீனருக்கு ஒரு லட்சம் ரூபாவும், ஒரு கை, கால், அல்லது கண் இழந்தவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

இலங்கைவரலாற்றில் படையினருக்கு அதிக சலுகைகள் வழங்கப்பட்டு வருவதும் இதுவே முதல்தடவையாகும்.

வழமையாக படையினருக்கு வழங்கப்படும் நட்டஈட்டிற்கு மேலாக இக்காப்புறுதிப்பணம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இப்பணத்திகான நிதியை தேசிய பாதுகாப்புநிதி என்ற போர்வையில் மக்களிடம் இருந்து அறவிட அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும் மேலும் அறியப்படுகிறது. க இ

## இலங்கை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மையை உணர்ந்து இந்த அடிப்படையில் புதிய சமாதான முயற்சியில் இறங்க வேண்டும். இதுவே சிங்கள மக்கள் 21ம் நூற்றாண்டில் எதிர் கொள்ளும் சகல சவால்களையும் சமாளித்து முன்னேற்றப்பாதையில் காலடி எடுத்து வைக்க ஏதுவாக அமையும். கே-சி

## மக்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் முதலுதவித் தொண்டர்கள் பொதுமக்களுக்கு ஆற்றி வரும் சேவை பாராட்டிற்குரியது என்றார்.

இவ்விழாவின் போது முதலுதவிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கல், விசேட முதலுதவிப்படையின் அறிமுகம். கௌரவிப்பும் இடம் பெற்றது. கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (162)


## முக்கிய அறிவித்தல்

### தனியார் கல்விநிறுவன ஒன்றியம் யாழ். மாவட்டம்

சகல தனியார் கல்வி நிறுவனங்களிலும், பிரத்தியேக வகுப்புககளிலும் வகுப்புக்கள் யாவும் வழமை போல் தொடர்ந்து இயங்கும் எனவும் இதுவரை பரப்பப்பட்ட வதந்திகள் யாவும் பொய்யானவை எனவும் இது தொடர்பாக உண்மைக்கு புறம்பான வதந்திகள் பரப்புபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(ஏ-4972)

நல்லூர் கிளை நூலகம்

## சவூதி - குவைத் தூதரகங்கள் கொழும்பில் திறக்கப்பட்டன

(கொழும்பு)

சவுதிஅரேபியாவும், குவைத்தும் தத்தமது தூதரகங்களை கொழும்பில் திறந்துள்ளன.

இலங்கையில் ஆயிரக்கணக்கானோர் வேலையில்லாமலிருப்பதினால் இவர்களுக்கு தத்தமது நாடுகளில் வேலை வழங்கும் நோக்குடனேயே தாம் தூதரகங்களை திறந்திருப்பதாக மேற்படி இரு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சுக்கள் அறிவித்துள்ளன.

சவுதி அரேபியாவிலும், குவைத்திலும் தற்போது மூன்று லட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் வேலை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. -வி-இ

## இடம்பெயர்ந்தோருக்கு உணவுப் பொருள் வந்தது

(யாழ்ப்பாணம்]

இடம் பெயர்ந்தவர்களுக்கான உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 'லங்கா கல்யாணி' என்ற கப்பல் நேற்று முன்தினம் பருத்தித்துறை வந்து சேர்ந்தது.

கப்பலிலிருந்து உணவுப் பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

இக்கப்பலில் 1000 மெ. தொன் அரிசி, 808 மெதொன், சீனி, 303 மெ.தொன் பருப்பு, 100 மெ. தொன் பயறு ஆகியன வந்தன. (170-சி)

அசம்பாவிதங்களின்போது

## காணமல் போனோர் பதிவு வேலை யாழ். மாவட்டத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அசம்பாவிதங்களின் போது காணமற் போனவர்களைப் பதிவு செய்யும் வேலைகள் யாழ். மாவட்ட பதிவாளர் செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேலதிக பதிவாளர் சதாசிவஐயர் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், காணமல் போனவர்கள பற்றிய பதிவு வேலைகள் மற்றைய மாகாணங்களைப் போலல்லாது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அந்தந்த மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலேயே நடைபெற்று வருகிறது.

யாழ். மாவட்டப் பதிவாளர் செயலகத்தில் காணமல் போனவர்கள் பதிவு தொடர்பாக இதுவரை 172 விண்ணப்பங்கள் கிடைக்கபெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். -162-த

## போர்முனை செல்லும் பத்திரிகையாளர்க்கு விசேஷ காப்புறுதி

(கொழும்பு)

போர்முனைக்குச் சென்று செய்தி சேகரிக்கும் பத்திரிகையாளர்களுக்கு அரசு விசேட கப்புறுதித் திட்டம் ஒன்றை அமுல்படுத்தியுள்ளது.

கடந்த காலத்தில் நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதியிலுள்ள போர் முனைகளுக்குச் செய்தி சேகரிக்கச் சென்றபத்திரிகையாளர் பலர் கொல்லப்பட்டதாகவும் இவர்களுக்கும், இவர்களது குடும்பத்தவர்களுக்கும் நிவாரணம் வழங்கும் விதமாகவே இந்த காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுறது. -இ

## அஞ்சலகங்களில் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

பின்வரும் அலுவலகங்களில் சிற்றூழியர்களுக்கான பதிவு செய்யப்பட்ட பதிலாட்கள் பதவி வெற்றிடமாகவுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் அவ்வஞ்சல் அலுவலகங்களில் அதிபர்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்று 16-06-95க்கு முன் விண்ணப்பங்களை தமக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்ப வேண்டுமென்று யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்கர் ஏ.கே. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார்.

அளவெட்டி அஞ்சலலுவலகம், அச்சுவேலி அஞ்சலலுவலகம், புத்தூர் உபஅஞ்சலலுவலகம், சங்கானை அஞ்சலலுவலகம், சாவகச்சேரி அஞ்சலலுவலகம், மீசாலை உபஅஞ்சலலுவலகம், சுன்னாகம் அஞ்சலலுவலகம், மல்லாகம் உபஅஞ்சலலுவலகம், ஏழாலை உபஅஞ்சலலுவலகம், கைதடி அஞ்சலலுவலகம், கரவெட்டி அஞ்சலலுவலகம், மானிப்பாய் அஞ்சலலுவலகம், புலோலி உபஅஞ்சலலுவலகம், குடத்தனை உபஅஞ்சலலுவலகம், உரும்பிராய் அஞ்சலலுவலகம்' வல்வெட்டித்துறை அஞ்சலலுவலகம், தொண்டமாறு உபஅஞ்சலலுவலகம், வயாவிளான் அஞ்சலலுவலகம், யாழ்ப்பாணம் அஞ்சலலுவலகம். -இ

எங்கள் நிலங்களை எதிரிகள்
எரித்துக்கொண்டிருக்கையில்
எங்கோ மூலையில்
உளவாளி சிரித்துக்கொண்டிருப்பான்
அடையாளம் கண்டபின்னும்
அலட்சியம் செய்யாதீர்:
அடுத்த ஷெல் உங்களின்
தலைமேலே விழக்கூடும்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டு தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.

## இராணுவம் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் இரவு 9-00 மணியளவில் கரையோர பகுதிகளை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை தீர்க்கின்றனர்.

நேற்று அதிகாலை வேளையிலும இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுககளை மேற்கொண்டனர். -170-இ

## திருமலை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ணுண்டோவும், மற்றும் ஒரு அதிகாரி உட்பட 11 இராணுவத்தினர் அதேஇடத்தில் பலியானார்கள்.

35 இராணுவத்தினர் படுகாயமடைந்தார்கள். 10 இராணுவத்தினரை காணவில்லை என்றும், இத் தாக்குதலில் இராணுவத்தினரின் உயிரிழப்பு இன்னும் சரியாகத் தெரியவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னாரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் நேற்று நள்ளிரவு மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் 6 அதிரடிப் பொலிசார் பலியானார்கள். மூவர் படுகாயமடைந்தனர்.

மன்னார்த் தீவுக்கும்- தள்ளாடி இராணுவ முகாமுக்குமிடையில் உள்ள பெரிய பாலத்தடிக்கு 350 மீற்றரில் அமைக்கப்பட்டிருந்த பலமான காவலரண்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் ஆறு பொலிசார் பலியானார்கள். காவலரணும் முற்றாக அழிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் ரி-81 எல். எம். ஜி. துப்பாக்கிகள் -3, ரி-56 ஒன்று ரகத்துப்பாக்கிகள்-5, ரி-56 இரண்டு ரகத துப்பாக்கி-1, ரி-56 இரண்டு ரகத்துப்பாக்கி-1, ரி-56 ரக ரவைக்கூடுகள்-24, குண்டுகள் 4, தலைக்கவசம்-1, இராணுவப் பை 1, ரவைக் கூடுதாங்கி அணிகள் 6, பொலிஸ் தொப்பி-1 ஆகிய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்கள்,

பூநகரி வடபகுதியில் அமைந்துள்ள இராணுவ நிலை ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியானதுடன் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு மேற்படி தாக்குதல் நடைபெற்றதாக இராணுவத் தலைமைச் செயலகம் அறிவிதுள்ளது.

மட்டக்களப்பு எல்லைப்பகுதியில் உள்ள சவளக்கடைப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் இரு இராணுவத்தினரும், ஒரு ஊர்காவல் படை உறுப்பினரும் பலியாகியுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு 11-மணியளவில் மேற்படி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்தினர்கள்.

இத்தாக்குதலில் ரி-56 இரண்டு ரகத் துப்பாக்கி-1, ஆர். பி. ஜி. ஸ்கோப்-1, 60-மில்லி மீறறர் ஸ்கோப்-1, கிளைமோர்-4, நடுத்தர ரவைகள் 6620, கிளைமோர்வெடிக்க வைக்கும் சாதனம்-3, ஆர். பி. ஜி. துப்பரவு செய்யும் ரோட்-1, இராணுவச் சப்பாத்து 2 சோடி, வயர் ரோல்கள்-3, சாதாரண சப்பாதது 1 சோடி, மழைக் கவசங்கள்-3 ஆகிய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்கள்.

மேற்படி மோதலில் வீரவேங்கை வன்னியன் (தங்கத்துரை ஜோன்சன், மூதூர்), வீரவேங்கை வீரியன்(அந்தோனிப்பிள்ளை ஜஸ்ரீன் அமலதாஸ், ஏழாலை தெற்கு) ஆகிய போராளிகளும் வீரச்சாவு அடைந்துள்ளார்கள். ,வி-இ

## வளலாய் இராணுவம் ஷெல் தாக்குதல்

[வடமராட்சி]

வளலாய் இராணுவத்தினர் தினமும்வல்லைப்பாலத்தையும் வல்லை வெளியையும் இலக்காக வைத்தே இரவில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

இரவில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள வல்லை பாதையூடாக பயணம் செய்யும் வாகனங்கள் இரவு வேளைகளில் வெளிச்சத்துடன் செல்வதால் வளலாய் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுத்தினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். இ-166-51

பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு

## ஆஸ்பத்திரிக்கு டீசல் அனுப்புவதில் தாமதம்

(யாழ்ப்பாண]

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கப்பலில் டீசலை எடுத்துவருதற்கு நேற்று வரை பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி கிடைக்கவில்லையென்று வைத்தியசாலைக்கு கொழும்பிலிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது:

வைத்தியசாலைக்குரிய டீசல் மற்றும் எரிபொருளை கப்பலில் கொண்டு செல்வதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்க இழுத்தடித்து வருவதாகவும் அத்தகவல் மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில் எரிபொருள் பற்றுக்குறையால் வைத்தியசாலையின் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரியில் மின்சாரம் நீர்விநியோகம் மற்றும் சேவைகள் என்பன மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயேமேற் கொள்ளப்பட்டுவருகின்றன. 170 இ

## ஓய்வூதியர் உடன் கொடுப்பனவு பெற திட்டம்

(கொழும்பு)

சேவையிலிருந்து ஓய்வு பெறும் அரசாங்க ஊழியர்களின் ஒய்வூதியக் கொடுப்பனவு, திரட்டிய சேவையின் நன்மதிப்பு பணம், அந்திய காலக்கொடுப்பனவைத் தாமதமின்றி வழங்குவதற்கான புதிய திட்டம் ஒன்றை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அமுல் செய்யவுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: இக் கொடுப்பனவுகளை வழங்குவதிலிருந்து வந்த தாமதம் ஒய்வூதியர்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இது தொடர்பான நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கு ஒய்வூதியம் பெறுவோர் தாம ஏற்கனவே கடமையாற்றிய திணைக்களங்களில் பேணப்பட்ட சுய விபரக் கோவைகள் மற்றும் இதர விபரங்களை ஒழுங்காக வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. -க-இ

## வடபகுதி மீதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர்.

சர்வதேச போர் நடவடிக்கைகளுக்கும், மனிதநேயசட்டதிட்டங்களுக்கும் இந்தப் பொருளாதாரத்தடை எதிராகவே உள்ளது. எனவே அரசு பொருளாதாரத் தடையை உடன் நீக்கவேண்டுமென்று அந்த அமைப்புக்கள் கேட்டுள்ளன. (இ)

## முதலுதவி பயிற்சி வழங்க யாழ் செஞ்சிலுவை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அனர்த்த காலங்களில் முதலுதவி சேவை வழங்குவதற்காக உடனடியாக முதலுதவிப் பயிற்சிகளை தேவைப்படுவோருக்கு வழங்க யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கையெடுத்துள்ளது.

யாழ். மாவட்டம் அனைத்திலுமுள்ள செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுகள் மூலமாக இப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு பிரிவுக் காரியாலயங்களிலும் அப் பிரிவுத் தொண்டர்களுக்காகவும் மற்றும் ஆர்வமுள்ள ஏனையோருக்காகவும் தேர்ச்சிபெற்ற விரிவுரையாளர்கள் மருத்துவர்கள் மூலமாக முதலுதவிப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக யாழ் செஞ்சிலுவைச் சங்க செயலாளர் பேராசிரியர் வி. கே கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ். கிளையில் முதலாவது பயிற்சிநெறி நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். கி-இ

## பேராதனை கல்வி நடவடிக்கை அடுத்த வாரம் ஆரம்பம்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகவுள்ளன.

விஞ்ஞானம், பல் வைத்தியம், மிருக வைத்தியம், உயிரியல் விஞ்ஞானப் பிரிவுகளில் 1993-94 கல்வியாண்டுக்குத் தெரிவாகியுள்ள புதிய மாணவர்களுக்கான ஆங்கில பாடநெறி எதிர்வரும் 5-ம் திகதி ஆரம்பமாகும்.

பொறியியல் பீடத்திற்கான ஆங்கில பாடநெறி 25-ம் திகதியும், கலைப்பிரிவு மற்றும் சிரேஷ்ட மாணவர்களுக்கான பாடநெறிகள் 5-ம் திகதியும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்படுகின்றது.

இதுவரை ஆரம்பிக்கப்படாத கலைத்துறைக்கான சகல பட்டப்பின் படிப்பு பாடநெறிகளும் 10 ம் திகதி ஆரம்பமாகும. விஞ்ஞான சிரேஷ்ட மாணவாகளுக்கு 26-ம் திகதியும், மிருக வைத்திய பீடம், உயிரியல் விஞ்ஞான சிரேஷ்ட மாணவர்களுக்கு 5-ம் திகதியும் உயிரியல் விஞ்ஞான பீடம் 24-ம் திகதியும் மற்றும் விவசாய, பொருளியல், மிருக வைத்திய பீடங்கள் முறையே 3-ம், 13-ம். 19-ம், 14 ம் திகதிகளிலும் ஆரம்பமாகவுள்ளன. -கி-இ